முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.7.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 358 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3,010 குடியிருப்புகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.7.2023) தலைமைச் செயலகத்தில், CREDAI அமைப்பின் தேசிய துணைத் தலைவர் எஸ். ஸ்ரீதரன், மாநிலத் தலைவர் ஆர். இளங்கோவன், புதிதாக தேர்வு செய்யப்பட்ட தலைவர் ஹபீப், சென்னை தலைவர் சிவ குருநாதன், செயலாளர் எஸ். ஆனந்த், பொருளாளர் வி. சதாசிவம் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்

ரூ.358.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 3010 குடியிருப்புகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஜூலை 13-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.358.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 3010 குடியிருப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.7.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 358 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3,010 குடியிருப்பு களை திறந்து வைத்து, இக்குடியிருப்பிற்கான 902 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத் தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தல்

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் சென்னையில் சந்தோஷ் நகர் பகுதி - 1 திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தூண் மற்றும் 14 தளங்களுடன் 57 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் 410 புதிய குடியிருப்புகள், சந்தோஷ் நகர் பகுதி - 2 தூண் மற்றும் 14 தளங்களுடன் 20 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 150 புதிய குடியிருப்புகள், மூலகொத்தளம் பகுதி - 1 திட்டப்பகுதியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 94 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் 648 புதிய குடியிருப்புகள், மூலகொத்தளம் பகுதி - 2 தூண் மற்றும் 11 தளங்களுடன் 57 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் 396 புதிய குடியிருப்புகள்;

செங்கல்பட்டு மாவட்டம், அன்னை அஞ்சுகம் நகர் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 25 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 192 அடுக்குமாடி குடியிருப்புகள், காயரம்பேடு திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 7 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 64 அடுக்குமாடி குடியிருப்புகள், பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் தரை மற்றும் 7 தளங்களுடன் 25 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் 480 புதிய குடியிருப்புகள்;

வேலூர் மாவட்டம், பத்தலபல்லி திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 33 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் 304 அடுக்குமாடி குடியிருப்புகள்; தருமபுரி மாவட்டம், மோளையானூர் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 19 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் 192 அடுக்குமாடி குடியிருப்புகள்; தேனி மாவட்டம், வடவீரநாயக்கன்பட்டி பகுதி - 3 திட்டப்பகுதியில் தரைத்தள இரட்டை குடியிருப்புகள் 10 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 110 குடியிருப்புகள்; கன்னியாகுமரி மாவட்டம், ஈசாந்திமங்கலம் திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 6 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 64 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 358 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 3,010 குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, இக்குடியிருப்பிற்கான 902 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளையும் வழங்கினார்

நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற திலிருந்து இதுவரை 1583.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 15,505 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் உயர் கல்வி பயிலும் 100 மாணவர்களுக்கு DBS வங்கியின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 25 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 5 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் டி.பி. எஸ் வங்கியின் தலைமை நிர்வாக இயக்குநர் பரத் மணி, வர்த்தக வங்கி பிரிவு தலைவர் சுஷந்த் ஷெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கலைஞர் புகழ் பாடும் நூற்றாண்டு நூலகம்!

மதுரை வரலாற்றில் மற்றும் ஒரு அடையாளம்!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

கோடானு கோடி மாணவ - மாணவியர் - மக்கள் மகிழ்ச்சி!

மதுரை, ஜூலை 13-

தமிழின தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு படைத்த படைப்புகள் வரலாறு படைத்த வைகளாக காலம் முழுவதும் நினைவு கூரும். அதிலும் மதுரை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை, மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் அமைத்தல், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமைத்தல், மாவட்ட நீதிமன்றம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் வைகை ஆற்றின் பல்வேறு பாலங்கள், என பல்வேறு திட்டங்கள் இன்றும் எல்லோர் மனதிலும் நிலைத்து நின்று பெருமை சேர்த்து வருகின்றது.

கலைஞர் அவர்கள் தெற்காசியாவே போற்றும் வகையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் மாபெரும் நூலகத்தை தமிழ்நாட்டின் தலைநகரமாம் சென்னையில் நிறுவி பெருமை சேர்த்தார். அப்படிப்பட்ட தலைவருக்கு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு முத்தமிழ் சங்கம் கண்ட நான் மாட கூடல் என்று அழைக்கப்படும் மதுரையில் மாபெரும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அமைக்க திட்டமிட்டு அதற்காக நிதியையும் ஒதுக்கினார்.

இதற்கான இடம் புது நத்தம் சாலையில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் வந்து செல்லக் கூடிய வகையில் தேர்வு செய்யப்பட்டு, கடந்த 2022 ஜனவரி 11ஆம் தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி கட்டுமானப் பணிகளை துவக்கி வைத்தார். கலைஞர் நூலகம் என்றாலே எல்லோரும் வியக்கும் வகையிலும், பலரும் பாராட்டும் வகையிலும் அமைய வேண்டும் என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழு கவனம் செலுத்தி நாள்தோறும் பணிகள் குறித்து கேட்டறிந்து ஒவ்வொரு செங்கலும், ஒவ்வொரு அறையும், ஒவ்வொரு புத்தகங்களும் பேசும் வகையில், புகழ்பாடும் வகையில் உலகத்தரம் வாய்ந்தபடி வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது

இந்த அற்புத கலைநயத்துடன் சுமார் 236 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு தளங்களுடன் கட்டப்பட்டு, கண்கவர் கட்டுமானத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலத்தில் கீழ்க்கண்ட பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள அதன்விபரம்.

நூலகத்தின் நடுப்பகுதியில் முற்றும் கண்ணாடிப் பேழைக் கூடாரம், ஜெர்மன் கண்ணாடி சுவர் பூச்சு, ஆறு லிப்ட்டுகள், நான்கு எஸ்கலேட்டர்கள், நவீன பார்க்கிங் வசதி என முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கலைஞர் நூலகம் அமைந்துள்ளது. நூலகத்தின் முன் பகுதியில் கலைஞர் அவர்கள் அமர்ந்து கையில் உள்ள நூலை படிக்கும் வகையில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்த சிலையின் பீடத்தை சுற்றி பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் கலைஞர் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது, அதில் அவர் எழுதிய நூல்கள் உட்பட 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன, அவரின் நூல்களை படித்துவிட்டு சிறிது நேரம் ஓய்வெடுக்க விரும்புவோர் அந்த அரங்கில் ஒரு இருக்கையில் அமர்ந்தால் அருகில் உள்ள டிஜிட்டல் டி.வி.யில் கலைஞர் தோன்றி உங்கள் அருகில் அமர்ந்து உங்கள் நலம் விசாரிப்பார், நூலகம் தொடர்பாக உங்களிடம் பேசுவார், டிஜிட்டல் டி.வி.யில் உங்களிடம் கலைஞர் பேசுவது போல தோன்றும் காட்சி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் இதற்காக தனி சாப்ட்வேர் தயாரிக்கப்பட்டு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளது. இதனை சென்னையைச் சேர்ந்த 'அன்கிடைய்' என்ற அறிவியல் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

அதேபோல் நூலகத்தின் முதல் தளத்தில் குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா மற்றும் கண்டுபிடிப்புகள் அடங்கிய உபகரணக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதனையும் அன்கிடை என்ற நிறுவனம் வடிவமைத்துள்ளது. இக்கூட்டத்தில் 14 வகையான அறிவியல் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது, குறிப்பாக அமெரிக்காவை தொடர்ந்து உலகில் எங்கும் இல்லாத வகையில் மனித உடற்கூறை விளக்கி கூறும் வகையில் ஐந்தடி நீள டிஜிட்டல் கம்ப்யூட்டர் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மனிதனின் மூளை, கண்கள், இதயம், எலும்பு, தசை, ரத்த நாளங்கள் என அனைத்து உறுப்புகளும் எவ்வாறு இயங்குகிறது என்பதை சிறுவர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும். மேலும் சோலார் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது, இதன்மூலம் பல்வேறு கிரகங்களில் மனிதனின் உடல் எடை எவ்வாறு இருக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம். இதன்மூலம் எட்டு கிரகங்களில் நமது எடை என்னவாக இருக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

அது மட்டுமல்ல மெத்தை போல அமைக்கப்பட்டுள்ள கருவி ஒன்றில் குழந்தைகள் செல்லும் போது வனத்திற்குள் செல்வது போல ஒரு குதூகலமான உணர்வை தரும், இதன் மூலம் நூலகத்திற்கு குழந்தைகளின் வருகையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் பொதுவாக ஒரு பகுதியில் புதிதாக குளம் கால்வாய் கட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய வகையில் கணிதவியல் பூங்காவன ஏ.ஆர்.ஜான் பாக்ஸ் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக நூலக பகுதியில் பிரத்தியோகமான மணல் போன்ற கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் கூகுள் மேப் மூலம் நமக்கு புதியதாக கால்வாய் தோண்ட தேவையான இடமானது அந்த மணல் படிகையில் பதிவிடப்படுகிறது. இதன் மூலம் எங்கு கால்வாய் அல்லது குளம் வெட்ட வேண்டுமோ அந்த இடத்தில் மணல் தோன்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆற்றுப்படுகை காண்பிக்க நீல நிறமாக மாறுகிறது. குவிக்கப்பட்ட மண் குவியல் மலை, பசுமையான புல்வெளி பச்சை நிறத்திலும் மாறி நம்மை பரவசப்படுத்துகிறது. விமானம் எவ்வாறு இயங்குகிறது என்பதை செயற்கையான முறையில் இயந்திர வடிவம் இயந்திரம் வடிவமைக்கப்பட்டதன் மூலம் மாணவர்களுக்கு காண்பிக்கும் போது அவர்கள் விமானியாக சேர வாய்ப்புள்ளது. இதுபோல எண்ணற்ற சிறப்பம்சங்கள் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் அமைந்துள்ளன.

பார்போற்றும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நாடு போற்றும் நம் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்வி வளர்ச்சி நாளான 15.07.2023 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கரங்களால் திறந்து வைத்து பெருமை சேர்த்து விழா பேருரையாற்ற உள்ளார். சிறப்புமிக்க இந்நிகழ்ச்சிக்கு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்புரை நிகழ்த்துகிறார். பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுதுறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். எச்.சி.எல் குழும நிறுவனர் ஷிவ்நாடார், தலைவர் ரோஷினிநாடார் சிறப்பு விருந்தினராக பங்கேற்கின்றனர். பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.சந்திர மோகன் நன்றி கூறுகிறார்.

சைதை தொகுதியில் - ரூ.6.58 கோடியில்

பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள்!

பயன்பாட்டிற்கு அமைச்சர்கள் கே.என்.நேரு - மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஜூலை 13-

சென்னை சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு169க்குட்பட்ட அரசு பண்ணை மற்றும் ஜோதியம்மாள் நகர் பகுதிகளில் ரூ.6.58 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையத்தினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.07.2023) மக்கள் சேவை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர்.

அரசு பண்ணை மற்றும் ஜோதியம்மாள் நகர் பகுதிகளிலிருந்து கழிவுநீர் நேரடியாக அடையாற்றில் கலக்காமல் தாடண்டர் நகர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல ரூ.6.58 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்கள் 1,296 மீ. நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ளது. அரசு பண்ணையில் சாலையோர கழிவுநீர் உந்துநிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஜோதியம்மாள் நகரில் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் அதைச் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. கழிவுநீர் உந்து குழாய் 1,221 மீ. நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3000 நபர்கள் பயனடைவார்கள்.

இதனைத் தொடர்ந்து, அரசு பண்ணை மற்றும் ஜோதியம்மாள் நகர் பகுதிகளுக்கு ரூ.49.77 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா சாலையிலிருந்து 350 மீ. நீளத்திற்கு குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணியினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் தொடங்கி வைத்தனர். இந்தப் பணிகளை மூன்று மாதங்களில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அமைச்சர் பெருமக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

பின்னர், சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ், ரூ.30 இலட்சம் மதிப்பில் ஜோதியம்மாள் நகரில் படிப்பகத்துடன் கூடிய நூலகக் கட்டிடம் கட்டும் பணியினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர்.

பின்னர் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் இந்நிகழ்ச்சியில் பேசும்போது தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று தமிழ்நாடு முதலமைச்சராகவும் இருந்துள்ளார்கள். அப்போது முதல் இந்தத் தொகுதியில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், நகராட்சி நிருவாகத்துறையின் சார்பில் மழைநீர் வடிகால் பணிகள், சாலைப் பணிகள், குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் பாதாளச் சாக்கடைப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் வகையில் தற்போது நெம்மேலியில் 150 எம்.எல்.டி. கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு விரைவில் முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட உள்ளது.

மேலும், பேரூரில் 400 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டிகள் பணிகள் தொடங்கப்பட உள்ளது.

சென்னை மக்களுக்கு 800 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2021ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் 85 இலட்சம் பொதுமக்களுக்கு 1000 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து கூடுதலாக 250 எம்.எல்.டி. குடிநீர் வழங்குவதற்கான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது என நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் சென்னை மாநகர மேயராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த காலத்தில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் குறிப்பாக இந்த ஜோதியம்மாள் நகரில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை செயல்படுத்தியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து, தற்போதும் முதலமைச்சர் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும் குறிப்பாக, ஜோதியம்மாள் நகர் பகுதிக்கும் பல்வேறு திட்டங்களை வழங்கியுள்ளார்கள்.

இப்பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் ரூ.6.58 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், ரூ.49.77 இலட்சம் மதிப்பில் குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் மூன்று மாதக் காலத்திற்குள் முடிக்கப்படும்.

மேலும், இப்பகுதியில் பள்ளி செல்லும் மாணவர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூ.30 இலட்சம் மதிப்பில் படிப்பகத்துடன் கூடிய நூலகக் கட்டடம் கட்டும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மூன்று மாதக் காலத்திற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி. அமித், மண்டலக்குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர், மண்டல அலுவலர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியத்தில்; முதல்வர் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்பது பணிகளுக்குகான ரூபாய் 11 கோடியில் ரூபாய் 5 கோடி மதிப்பில் ஐந்து சாலை அமைக்கும் பணிகள் பிரளயம்பாக்கம் ஊராட்சி போலாட்சி அம்மன் குளம் முதல் கம்மாளமடம் வரை, போலாட்சி அம்மன் முதல் பாக்கம் வரை, தொட்டிமேடு முதல் அண்ணாமலைச்சேரி வரை சாலை அமைக்கும் பணியை மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் டி.ஜெ. கோவிந்தராஜன் துவக்கி வைத்தார். உடன் மீஞ்சூர் ஒன்றிய குழு தலைவர் அத்திப்பட்டு ஜி.ரவி, ஒன்றிய செயலாளர் பா.சுகுமாறன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஏ.கே.சம்பத்குமார், ஒன்றிய துணை பெருந்தலைவர் தமிழ்செல்வி பூமிநாதன், பழவை முகமது அலவி, ஊராட்சி செயலாளர்கள் ரவி, பன்னீர்செல்வம், அண்ணாமலைச்சேரி ஆறுமுகம், தமின்ஷா, காசி, அன்பழகன், ஏசு, முரளி பாஸ்கர், கலைவாணன், ராமு, பனப்பாக்கம் கஜேந்திரன், ஏலியம்பேடு பாலா உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.